நாள். 21.01.2025

DVC. No. 03/2022

ம.சா. 2

திருமதி. சரஸ்வதி

க/பெ. சக்திவேல்

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**குறுக்கு விசாரணை**

1. எனக்கு இரண்டு மகள், ஒரு மகன். எனது மகள்கள் இருவருக்கும் திருமணமாகிவிட்டது. எனது மகனுக்கு திருமணமாகவில்லை. எனது மூத்த மகளை உள்ளூரிலேயே திருமணம் செய்து கொடுத்துள்ளேன். மனுதாரருக்கு திருமணமாவதற்கு முன்பே எனது மூத்த மகளுக்கு திருமணமாகிவிட்டது என்றால் சரிதான். எனது மூத்த மகளுக்கு 20 பவுன் நகை போட்டேன். எனது மூத்த மகள் காதல் திருமணம் செய்துக்கொண்டார். எனது மூத்த மகளுக்கு திருமணத்தின்போது எந்த சீரும் செய்யவில்லை. குழந்தை பிறந்த பின்னிட்டு தான் திருமண சீர் செய்தேன். எனது மூத்த மகளுக்கு குழந்தை பிறப்பதற்கு முன்பாகவே தீபிகாவிற்கு திருமணமாகிவிட்டது என்றால் சரிதான்.

2. மனுதாரருக்கு திருமணமான பின்னிட்டு தான் எனது மூத்த மகளுக்குண்டான திருமண சீர் செய்தேன் என்றால் சரிதான். மனுதாரருக்கு நடந்த திருமணம் பெரியோர்களார் நிச்சயிக்கப்பட்ட திருமணம் என்றால் சரிதான். மனுதாரரை ஒருவருட காலமாக பெண் கேட்டு வந்தார்கள். எனது மூத்த மகளுக்கு திருமணம் ஆனால் தான் மனுதாரருக்கு திருமணம் செய்து வைக்கமுடியும் என கூறினேன். எனது மூத்த மகளுக்கு காதல் திருமணம் ஆனதால் எதிர்மனுதாரருக்கு திருமணம் செய்து வைத்தேன்.

3. எனது அண்ணன் பெயர் வடிவேல். மனுதாரருக்கு வடிவேல் தாய்மாமன் முறை ஆவார். எதிர்மனுதாரரின் தாய்மாமன் பெயர் மணி. மணியும், வடிவேலுவும் ஒன்றாக ஐஸ் கம்பெனி வைத்து நடத்தி வந்தார்கள். அந்த முறையில் இருவரும் சேர்ந்து மனுதாரர் – எதிர்மனுதாரருக்கு திருமணத்தை செய்து வைத்தார்கள். மணி மற்றும் வடிவேல் ஆகியோர் உடனிருந்து தான் திருமண சீர்வரிசை பற்றி பேசினார்கள் என்றால் சரியல்ல. திருமணத்தின்போது மனுதாரருக்கு எங்களால் முடிந்த

நகைகளைபோடுமாறு சொன்னார்கள். எனவே திருமண சமயத்தில் எதிர்மனுதாரர் தரப்பில் வரதட்சணையாக எதுவும் கேட்டு பெறவில்லை என்றால் சரிதான். மனுதாரருக்கு திருமணத்தின்போது 20 பவுன் நகை போட்டதாக இந்த மனுவில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான்.

4. திருமணமானது பெரிய வடகம்பட்டியில் உள்ள முத்துகுமாரசாமி திருமண மண்டபத்தில் நடந்தது என்றால் சரியல்ல. மண்டபத்தில் திருமணம் நடைபெறவில்லை. கோவிலில் வைத்து தான் நடைபெற்றது. திருமண செலவிற்காக ரூ.150000/- யை எதிர்மனுதாரர் தரப்பில் பெற்றுக்கொண்டார்கள். மணி மற்றும் வடிவேல் ஆகியோர்களை வைத்து தான் எதிர்மனுதாரரின் தாய்மாமா மணியிடம் திருமண செலவுகளை கொடுத்தோம். பெரிய வடகம்பட்டியிலுள்ள எதிர்மனுதாரரின் வீட்டின் வைத்து மேற்படி பணத்தை கொடுத்தோம். திருமணத்திற்கு 3 நாட்களுக்கு முன்னாள் பணம் கொடுத்தோம்.

5. மனுதாரருக்கு நகை, நட்டு உள்ளிட்டவற்றை திருமணத்திற்கு பின்னிட்டு தான் போட்டு அனுப்பினோம். மனுதாரருக்கு செல்போனை எதிர்மனுதாரர் தான் வாங்கி கொடுத்தார். திருமணத்தின்போது மனுதாரர் 12 ம் வகுப்பு முடித்துவிட்டு மாமரத்துப்பள்ளம் அரசு கலைக்கல்லூரியில் முதலாம் ஆண்டு படித்துக்கொண்டிருந்தார். திருமணத்தின்போது எனது மகள் படித்துக்கொண்டிருந்ததால் மனுதாரரை தொடர்ச்சியாக படிக்க அனுமதிப்பதாக எதிர்மனுதாரர் வாக்குறுதி கொடுத்தார்கள். ஆனால் திருமணத்திற்கு பின்னிட்டு மனுதாரரை எதிர்மனுதாரர்வீட்டார் படிக்க வைக்கவில்லை. எதிர்மனுதாரர் தரப்பில் மனுதாரரை படிக்க வைப்பதாக எவ்வித உத்தரவாதமும் தரவில்லை என்றால் சரியல்ல. வழக்கிற்காக வேண்டி எதிர்மனுதாரர் தரப்பினர் வாக்குறுதி கொடுத்ததாக உண்மைக்கு புறம்பாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

6. திருமணம் ஆனத்திற்கு பின்னிட்டு மனுதாரர் எதிர்மனுதாரர் எங்களது வீட்டில் தான் இருந்தார்கள். அதன் பின்னிட்டு எதிர்மனுதாரர் தங்கை வீட்டிற்கு சென்றார்கள். அவ்வாறு சென்றதற்கு பின்னிட்டு மனுதாரர் என்னிடம் போனில் தொடர்பு கொண்டு பேசினாரா? என்றால் ஆம். மேற்படி போன் ஆனதுஎனது மகளின் தனிப்பட்ட போன் அல்ல; எதிர்மனுதாரர் தான் அந்தபோனை மனுதாரருக்கு வாங்கி கொடுத்ததாக சொன்னார்கள். திருமணம் முடிந்து 20நாட்கள் வரை

பெரியவடகம்பட்டியில் தங்கியிருந்துவிட்டு அதன் பின்னிட்டு தான் பொம்மிடிக்கு சென்றார்கள் என்றால் சரிதான்.

7. எதிர்மனுதாரர் தரப்பில் வீடு கட்டிக்கொண்டிருப்பதாக சொன்னதால் மனுதாரரும் அவரது கணவரும் திருமணத்திற்கு பின்னிட்டு எங்களது வீட்டில் வந்து இருந்தார்கள். திருமணத்திற்கு பின்னிட்டு மனுதாரர் – எதிர்மனுதாரர் பொம்மிடிக்கு சென்றார்கள் என்றால் சரிதான். எதிர்மனுதாரரின் பெற்றோர்கள் வடகம்பட்டியிலிருந்து அடிக்கடி வந்துபோனார்கள். பெரியவடகம்பட்யிலேயே எதிர்மனுதாரருக்கு போதியவசதி வாய்ப்புடன் வீடு இருந்தது என்றால் சரியல்ல. அவ்வாறு எதிர்மனுதாரருக்கு வீடு இருந்ததால் அவரது சகோதரியின் வீட்டிற்கு சென்று 4, 5 மாதங்கள் தங்கியிருக்கவேண்டியஅவசியம் இல்லை என்றால் சரியல்ல. எதிர்மனுதாரரின் சகோதரி வீட்டிற்கு விருந்தினராக தான் சென்று வந்தார்கள் என்றால் சரியல்ல. மனுதாரர் எப்போதும் ஓய்வெடுத்துக்கொண்டு எதிர்மனுதாரரின் பெற்றோரை மதிக்காமல் எப்போதும் போன் பேசிக்கொண்டிருப்பது ஆகிய நடவடிக்கையில் ஈடுபட்டு வந்தார் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரரின் பெற்றோர்கள் போன் மூலம் எனக்கு தகவல் சொன்னார்கள் என்றால் சரியல்ல.

8. அது பற்றி எதிர்மனுதாரரின் பெற்றோர்கள் கண்டித்ததால் மனுதாரர் வன்மத்துடன் நடந்துக்கொண்டார் என்றால் சரியல்ல. அத்துடன் மனுதாரர் தற்கொலை செய்துக்கொள்ளபோவதாக எதிர்மனுதாரரை மிரட்டி வந்தார் என்றால் சரியல்ல. வரதட்சணை கொடுமை சம்பந்தமாக வடிவேல் அல்லது மணி மூலமாக சமரச பேச்சுவார்த்தை நடத்தினேனா? என்றால் ஆம். அத்துடன் எனது அண்ணன் வடிவேல் எதிர்மனுதாரரின் தாய்மாமாவிடம் கேட்டார்கள். எதிர்மனுதாரர் தரப்பில் வீடு கட்டுவதால் சீர்வரிசை கொடுத்தால் தான் ஆகும் என்று கூறிவிட்டார்கள்.

9. அதற்கு நாங்கள் கொஞ்சம் கொஞ்சமாக பணம் உள்ளபோது கொடுப்பதாக சொல்லிவிட்டோம். அதற்கு எதிர்மனுதாரர்கள் தரப்பில் ஒரே தவணையாக கொடுக்கவேண்டுமென்று கூறிவிட்டதாக நிரூபணவாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன். 10 லட்சம் , நகை உள்ளிட்ட சீர்வரிசை செய்யுமாறு சொன்னார்கள். எங்களிட ம் சீர்வரிசை நேரடியாக கேட்டார்களா? என்றால் இல்லை. எனது மகளிடம் சொல்லி தான் கேட்டார்கள். எங்களது தகுதிக்கு மீறி சீர்வரிசை கேட்ட நிலையில் காவல் நிலையத்தில் உடனடியாக புகார் எதுவும் கொடுக்கப்பட்டதாக என்றால் இல்லை.

10. மனுதாரருடன் சேர்ந்து வாழ முடியாத சூழல் ஏற்பட்டு விவாகரத்து கோரி எதிர்மனுதாரர் வழக்கு தாக்கல் செய்து அந்த வழக்கில் Notice சார்வான பின்னிட்டு தான் நானும், எனது மகளும் புகார் கொடுத்தோம் என்றால் சரிதான். முதலில் தருமபுரி மாவட்ட கண்காணிப்பாளர் அலுவலகத்தில் புகார் கொடுத்தோம். அதற்கு அவர்கள் எங்கு திருமணம் நடந்ததோ? அங்கு தான் புகார் கொடுக்கவேண்டுமென்று சொன்னார்கள். அதனால் முதன் முதலாக ஓமலூர் மகளிர் காவல் நிலையத்தில் தான் புகார் கொடுத்தோம். அங்கு போய்கேட்டபோது பிரச்சனை நடந்த இடமான அரூர் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவேண்டுமென்று சொன்னதால் அங்கு புகார் கொடுத்தோம்.

11. தீவட்டிப்பட்டி காவல் நிலையத்தில் கொடுத்த புகாரில் வரதட்சணை குறித்த சங்கதிகளை தான் கூறியிருந்தேன். தீவட்டிப்பட்டி காவல் நிலையத்தில் இருதரப்பினரையும் வைத்து விசாரித்து நடந்த விசாரணையின்போது எதிர்மனுதாரர் நகை, சான்றிதழ் ஆகியவற்றை எடுத்து சென்றுவிட்டதாக கூறியுள்ளார் என்றால் சரியல்ல. பள்ளி மாற்று சான்றிதழ் மட்டுமே கொடுத்தார்கள். எதிர்மனுதாரர், அவரது அம்மா உள்ளிட்ட 4 பேர் விசாரணைக்கு வந்திருந்தார்கள். அவ்வாறு காவல்நிலையத்தில் வைத்து பைசல் பேசிய பின்னிட்டு இருதரப்பினரும் சேர்ந்து வாழ பைசல் பேசினார்கள் என்றால் சரிதான். அவ்வாறு பைசல் பேசப்பட்ட சமயத்தில் மனுதாரர் சமையல் வேலையை கற்றுக்கொள்ளட்டும் என்று மனுதாரரை விட்டு சென்றதாக சாட்சி கூறுகிறார்.

12. அந்த சமயத்திலேயே வரதட்சணை கேட்டுகொடுமை செய்ததாக மனுதாரர் என்னிடம் தெரிவித்தாரா? என்றால் ஆம். அது சம்பந்தமாக பாப்பாரப்பட்டி அல்லது பென்னாகரம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா? என்றால் இல்லை. எதிர்மனுதாரரே, அவரதுபெற்றோரா, தாய்மாமாவோ வரதட்சணை கேட்டு தரக்குறைவாக நடத்தியதில்லை என்றால் சரியல்ல. மனுதாரர் தான் மனுதாரருக்குண்டான பணிவிடைகளை செய்யாமல் இருந்ததால் தான் மனுதாரர் மீது எதிர்மனுதாரர் குடும்பத்திற்கு வெருப்பு வந்தது என்றால் சரியல்ல. அது சம்பந்தமாக கேட்டபோது தான் மனுதாரர் தற்கொலை செய்துக்கொள்வதாக சொல்லி மிரட்டி வந்தார் என்றால் சரியல்ல.

13. மனுதாரர் அவ்வாறாக நடந்துக்கொண்டதால் தான் அசம்பாவிதம் நடந்துவிடக்கூடாது என பயந்து எதிர்மனுதாரர் விட்டுவிட்டு சென்றார் என்றால் சரியல்ல. அவ்வாறு வரதட்சணை கேட்டு எந்தவித தொந்தரவும் செய்யாததால் தான் அது சம்பந்தமாக காவல் நிலையத்தில் உடனடியாக புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. பொய்யான சங்கதியின் பேரில் மனு தாக்கல் செய்து கட்சியாடி வருகிறார் என்றால் சரியல்ல. மனுதாரர் எனது மகள் என்பதால் அவருக்கு ஆதரவாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.